# இலங்கையில் உள்ளூராட்சி அதிகார சபைகளை ஸ்தாபிப்பதற்கான அளவு கோள்களை இனங்காணல்

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## உள்ளூராட்சி அதிகார சபைகளை ஸ்தாபிப்பதற்கான அளவுகோள்களை தீர்மானிக்கும் பொருட்டு நியமனம் செய்த குழுவிடம் அதற்கான பிரேரணைகளை கோருதல்

புதிய உள்ளூராட்சி அதிகார சபைகளை ஸ்தாபித்தல் மற்றும் தற்போதுள்ள உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் மாநகர சபைகளாக தர முயர்த்துவதற்கு அளவு கோள்களை தீர்மானிக்கும் பொருட்டு கௌரவ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா அவர்களால் சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர அவர்கள் தலைவராக உடைமையாற்றும் சான்றாண்மையுடைய குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் உள்ளூராட்சி அதிகார சபைகளை ஸ்தாபித்தல் மற்றும் தற்போதுள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளின் தரத்தை உயர்த்துதல் என்பவற்றுக்கு பயன்படுத்த முடியுமான தேசிய அளவு கோள்களைக்கொண்ட மைந்த ஒரு முறைமை இல்லை. அதன் காரணமாக இலங்கையில் நகர மயமான அம்சங்கள் தென்படுகின்ற. ஒப்பீட்டு அளவில் முன்னேற்றமடைந்துள்ள பிரதேசங்களும் அதற்கு நேரொத்ததாக உள்ளூராட்சி அதிகார சபைகளாக இல்லாமை பெரும்பாலும் காணக்கூடியதாக உள்ளது. அதேபோன்று முதன்மையான கிராம இயல்புடைய பிரதேசங்களும் நகர உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குள் உள்ளடக்கியிருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

ஆகையால் இந் நிலையை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு எய்தக்கூடிய வளர்ச்சி காணப்படும் பிரதேசங்களை நகரமயமான மற்றும் பகுதி நகரமயமான பிரதேசங்கள் என குறித்துரைத்து இனங்காணுவதற்கு ஏற்றுக்கொள்ளமுடியுமான தேசிய அளவு கோள்களை கொண்ட மைந்தமுறைமைகட்டியெழுப்புதல் மேற்படிகுழுவின் கடமைப் பொறுப்பாகும்.

மேற்படி குழு அதன் பொருட்டு இலங்கையில் இவ்விடயம் தொடர்பான பொதுவான அறிவைக் கொண்டுள்ளதொழில்ஆற்றுபவர்கள் அல்லது தொழில்சார் அமைப்புகளிடமிருந்தும், பொது மக்கள் மற்றும் பொது அமைப்புகளிடமிருந்து இதன் போது பயன்படுத்த முடியுமான கருத்துகள் மற்றும் பிரேரணைகள் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது.

இக் குழு தமது நடவடிக்கைகளை 03 மாதங்களுக்குள் முடிவுறுத்தி உரிய அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் இவ் விடயத்திற்கு ஏற்புடையதாக தங்களது, தங்களின் அமைப்பின் பெறுமதிமிக்க கருத்துக்கள், பிரேரணைகள் அல்லது பரிந்துரைகள் என்பன குழுவின் செயலாளரிடம் கிடைக்கும் பொருட்டு 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆந் திகதிக்கு முன்னர் மின் அஞ்சலில் அல்லது தொலைநகல் (பெக்ஸ்) ஊடாக அனுப்பி வைக்கும் படிதயவுடன் அறியத்தருகின்றோம்.

**குழுச் செயலாளர்**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**இலக்கம் 330,**
**யூனியன் இடம், கொழும்பு**

**இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு அலுவலக நேரங்களில் அமைச்சின் சட்டப் பிரிவுடன் தொடர்புகொள்ளவும்.**

| | | |
|---|---|---|
| தொலைபேசி இலக்கம் | : | 0112302720 |
| பெக்ஸ் இலக்கம் | : | 0112337161 |
| மின் அஞ்சல் முகவரி | : | legal@pclg.gov.lk |

**எச்.ரீ.கமல் பத்மசிறி**
**செயலாளர்**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**